# ICAR – வேளாண் அறிவியல் மையம்

## திருநெல்வேலி (தென்காசி) மாவட்டம்

## பொதிகை சாரல் - செய்தி மடல்

செய்தி : 3 மடல் : 3 ஏப்ரல் - செப்டம்பர் (2024)

### தேனீ வளர்ப்பு குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி

தென்காசி மாவட்டம், வேளாண் அறிவியல் நிலையத்தில் ஏப்ரல் 23 முதல் 25, 2024 வரை தேனீ வளர்ப்பு குறித்த பயிற்சி நடைபெற்றது. இந்த பயிற்சியில் விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம், தேனீக்களின் வகைகள், தேனீ வளர்ப்பு இடங்களைத் தேர்ந்தெடுப்பது, தேனீ கூட்டங்களைப் பராமரித்தல், தேனீக்களைப் பாதிக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களை நிர்வகித்தல் போன்ற தலைப்புகளில் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், செயல்விளக்கமாக தேனை பிரித்து எடுப்பது பற்றியும் மற்றும் தேனை சந்தைப்படுத்தும் வழிகளில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை எவ்வாறு தயாரிப்பது என்பது உள்ளிட்ட தொழில் முனைவோர் அம்சங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. FSSAI சான்றிதழ் பெறுவது பற்றியும் விளைபொருள்களின் லேபிளிங் மற்றும் பேக்கேஜிங் குறித்தும் பயிற்றுவிக்கப்பட்டது. இறுதியாக, ஏப்ரல் 25, 2024 அன்று வெளிப்புற மதிப்பீட்டாளர்களால் நடத்தப்பட்ட ஆன்லைன் தேர்வு நடைமுறை மதிப்பீடுகள் மற்றும் நேரடி மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டது. இப்பயிற்சியில் 40 பங்கேற்பாளர்கள் பயிற்சியில் கலந்துகொண்டனர்.




### தோட்டக் காப்பாளர் திறன்மேம்பாட்டு பயிற்சி




இந்திய வேளாண் திறன் கவுன்சில் (ASCI) நிதியுதவியுடன் ஜூலை 5 முதல் ஆகஸ்ட் 3, 204 வரை தோட்டக் காப்பாளர் குறித்த 25 நாட்கள் (210 மணி நேரம்) கொண்ட திறன் மேம்பாட்டு பயிற்சி வேளாண் அறிவியல் மையத்தால் நடத்தப்பட்டது. முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் திரு. சுகுமார் அவர்கள் இந்நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து தலைமை உரை நிகழ்த்தினார். தொடர்ந்து தொழில்நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை) திரு. இளவரசன் அவர்கள் தொழில்நுட்ப உரைகள் மற்றும் திட்டத்தின் முழு காலத்தையும் ஒருங்கிணைத்தார். இப்பயிற்சியின் மூலம் கிராமப்புற இளைஞர்கள் திருவனந்தபுரத்தில் உள்ள ஜவஹர்லால் நேரு வெப்ப மண்டல தாவரவியல் பூங்கா ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கண்டுணர்வு சுற்றுலா மூலம் அழைத்து செல்லப்பட்டார்கள். இந்நிலையத்தின் தலைமை தொழில்நுட்ப அதிகாரி டாக்டர் சந்தோ அவர்கள் பல்வேறு வகையான தாவர கூறுகள் மற்றும் தோட்ட மேலாண்மை தொழில்நுட்பம் குறித்து எடுத்துரைத்தார். இறுதியாக, ஆகஸ்ட் 12, 2024 அன்று வெளிப்புற மதிப்பீட்டாளர்களால் நடத்தப்பட்ட ஆன்லைன் தேர்வு, நடைமுறை மதிப்பீடுகள் மற்றும் நேரடி மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டது.

### மாநில அளவிலான விவசாயிகள் தினம்

செப்டம்பர் 28, 2024 அன்று வேளாண் அறிவியல் மையம் தென்காசி மாவட்டத்திலிருந்து விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலா மூலம் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாநில அளவிலான விவசாயிகள் தினத்தில் 50 விவசாயிகள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியானது விவசாயிகளுக்கு சமீபத்திய விவசாய கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பல்வேறு புதிய தொழில்நுட்பங்களின் வெளிப்பாட்டைப் பெறுவதற்காக பல்வேறு ஸ்டால்களைப் பார்வையிட்டனர் மற்றும் நிபுணர்களால் நடத்தப்பட்ட தொழில்நுட்ப கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.



## தென்னை ஓடுகளில் மதிப்பு கூட்டல் திறன் மேம்பாட்டு பயிற்சி




திருநெல்வேலியில் உள்ள வேளாண் அறிவியல் மையத்தில் ஆகஸ்ட் 5 முதல் 9, 2024 வரை "தேங்காய் ஓடுகளில் மதிப்பு கூட்டல்" என்ற தலைப்பில் ஐந்துநாள் திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது. இந்த பயிற்சியில் தேங்காய் ஓடுகளின் உற்பத்தி பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது மற்றும் பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கியது. கிரேஸி கோகனட்டின் நிறுவனர் திரு அர்ஜதின் அவர்கள் தேங்காய் ஓடு கைவினைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள், அத்தியாவசிய பாதுகாப்பு நடைமுறைகள், வடிவமைப்புக் கொள்கைகள், நடைமுறை கைவினை நுட்பங்கள், வெட்டுதல் மற்றும் வடிவமைத்தல் அடிப்படைகள், மெருகூட்டல் முறைகள் மற்றும் எளிய மேம்பாட்டு தயாரிப்பு வடிவமைப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை குறித்து எடுத்துரைத்தார். தொழில்நுட்பமான வல்லுநர் (மனையியல்) தரக்கட்டுப்பாட்டு, விலை நிர்ணய உத்திகள், சந்தை ஆராய்ச்சி மற்றும் சந்தை வரம்பை மேம்படுத்த பிராண்டிங் ஆகியவற்றை எடுத்துரைத்தார். தொழில்நுட்ப வல்லுநர் (வேளாண் விரிவாக்கம்) சந்தைப்படுத்தல் உத்திகள் மற்றும் வேளாண் தொழில்முனைவோர் மேம்பாடு குறித்து திரு சுகுமார் தலைமையுரை ஆற்றினார். அதைத்தொடர்ந்து தென்காசியில் உள்ள மாவட்ட தொழில்துறை மையத்தின் (பயிற்சியாளர்) திரு குமார், தொழில்முனைவோரை ஆதரிப்பதற்கான அரசு திட்டங்கள் குறித்து விவாதித்தார். இந்த பயிற்சியில் மொத்தம் 50 நபர்கள் பங்கேற்றனர்.

## சுத்தமான பால் உற்பத்தி குறித்த பயிற்சி




வேளாண் அறிவியல் மையத்தில் ஜூலை 22 முதல் 29 வரை "சுத்தமான பால் உற்பத்தி" குறித்தபயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியின் தொடக்கவிழாவில் தொழில்நுட்ப வல்லுநர் (கால்நடை பராமரிப்பு) பிரதிநிதிகள் மற்றும் பங்கேற்பாளர்களை வரவேற்றார். தொடர்ந்து முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர், திறன் மேம்பாட்டு பயிற்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். தொழில்நுட்ப வல்லுநர் (கால்நடை பராமரிப்பு), கால்நடைகளின் முக்கியத்துவம் மற்றும் தேர்வு செய்வது, மடி மேலாண்மை, பால் கறக்கும் இயந்திரங்களின் பயன்பாடு, கால்நடை கொட்டகை பராமரிப்பு மேலாண்மை, உணவளிக்கும் முறைகள், குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசி அட்டவணைகள், நோய் மேலாண்மை (குடல் புற்றுநோய், புருசெல்லோசிஸ் மற்றும் ஆந்த்ராக்ஸ் உட்பட), இன–கால்நடை நடைமுறைகள், முதலுதவி மற்றும் நுண்ணூட்டத்தின் முக்கியத்துவம் குறித்து விரிவாக விளக்கினார். தொடர்ந்து முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் பசுந்தீவன உற்பத்தி குறித்தும், தொழில்நுட்ப வல்லுநர் (மனையியல்) மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருள்கள் குறித்தும், தொழில்நுட்ப வல்லுநர் (வேளாண் விரிவாக்கம்) கால்நடை துறையின் பல்வேறு திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும் திருநெல்வேலியில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு கண்டுணர்வு சுற்றுலாவாக விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டனர். பயிற்சியின் இறுதியாக பங்கேற்பாளர்களுக்கு பிந்தைய மதிப்பீடு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

## வேளாண் அறிவியல் மையத்தில் பொன்விழா ஆண்டு கொண்டாட்டம்




செப்டம்பர் மாதம் 26 மற்றும் 27–ஆம் தேதி, 2024 அன்று தென்காசி மாவட்டம் வேளாண் அறிவியல் மையத்தில் பொன்விழா ஆண்டு கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் நோக்கமானது, மாவட்டத்திற்கு வேளாண் அறிவியல் மையத்தின் செயல்பாடுகளை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். வேளாண் மற்றும் அதனைசார்ந்த துறைகளின் அதிகாரிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர். செப்டம்பர் 25, 2024 அன்று கன்னியாகுமரி வேளாண் அறிவியல் மையத்தில் இருந்து பொன்விழா ஜோதி பெறப்பட்டது. நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக முதுநிலை விஞ்ஞான மற்றும் தலைவர் திரு சுகுமார் அவர்கள் பொன்விழா ஜோதி தொடர் ஓட்ட நிகழ்வு மற்றும் வேளாண் அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார். அதைத்தொடர்ந்து இயற்கை விவசாய முறைகள், மண் மாதிரி எடுத்தல், மண் சுகாதார மேலாண்மை, ஊட்டச்சத்து மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, ஜீவாமிருதம், கணஜீவாமிருதம் மற்றும் பஞ்சகாவ்யா போன்ற கரிம உள்ளீட்டு தயாரிப்பு குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும் விவசாயிகளின் சிறந்த பங்களிப்புகளை கௌரவிக்கும் வகையில், வெற்றிகரமான விவசாயிகளக்கு கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் கொடுத்து அங்கீகரிக்கப்பட்டனர். மேம்படுத்தப்பட்ட விவசாய நடைமுறைகளுக்காக வேணாள் அறிவியல் மையத்தில் உருவாக்கிய இடுபொருள்கள் காட்சிப்படுத்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் ட்ரோன் தொழில்நுட்பம் மூலம் நானோ யூரியாவைப் பயன்படுத்துவது குறித்த செயல் விளக்கமும் காட்சிப்படுத்தப்பட்டது. இறுதியாக, செப்டம்பர் 28, 2024 அன்று நாமக்கல் வேளாண் அறிவியல் மையத்திடம் ஜோதி ஒப்படைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மொத்தம் 136 விவசாயிகள், பண்ணை பெண்கள் மற்றும் கிராமப்புற இளைஞர்கள் பங்கேற்றனர்.

## இயற்கை விவசாயத்தை மேம்படுத்துதல்



தென்காசி மாவட்டத்தின் வலசை, கோவிந்தப்பேரி, புளியரை மற்றும் அச்சன்புதூர் கிராமங்களில் செப்டம்பர் மாதத்தில் வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் இயற்கை விவசாயத்தை மேம்படுத்துதல் குறித்த பயிற்சி நடைபெற்றது. விவசாயிகளுக்கு நிலையான நீடித்த விவசாயம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மண் சுகாதார மேலாண்மை, பயிர் மூடாக்கு, இயற்கை விவசாய நுட்பங்கள் மூலம் ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மை ஆகியவற்றை வலியுறுத்தும் இயற்கை விவசாயம் தொடர்பான பல்வேறு தலைப்புகளை இந்த நிகழ்ச்சி உள்ளடக்கியது. பிஜாமிருத், ஜீவாமிருதம், கனஜீவாமிருத், பஞ்சகவ்யா, ஐந்து இலை கரைசல் உள்ளிட்ட இயற்கை இடுபொருள்களை தயாரிப்பதற்கான செயல்விளக்கங்களும் காட்சிப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஒரு சாம்பியன் விவசாயி கலந்துகொண்டு இயற்கை விவசாயத்தில் தங்கள் வெற்றிக் கதைகளையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். நிலையான நீடித்த விவசாய நடைமுறைகளை ஊக்குவிக்க, இயற்கை விவசாய முறைகள் குறித்த கையேடுகள் வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சியில் மொத்தம் 160 விவசாயிகள் பங்கேற்றனர்.

## பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம்




பார்த்தீனியத்தின் தீங்கு விளைவிக்கும் விளைவுகள் மற்றும் அதை ஒழிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் 16 முதல் 22 வரை பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த களையின் தீங்கு விளைவிக்கும் தாக்கங்களை முன்னிலைப்படுத்தவும், அதன் கட்டுப்பாட்டிற்கான நிலையான நடைமுறைகளை ஊக்குவிக்கவும், அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் மாணவர்கள் போன்ற பல்வேறு குழுக்களை இலக்காகக் கொண்டு இந்த வாரத்தில் பல நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டன. மேலும், பார்த்தீனியம் களை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் உயிரி உரம் தயாரிக்கும் தொழில்நுட்பம் குறித்து கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. ஊர்மேலழகியான் கிராமத்தில் மாணவர்களை பேரணியும் மற்றும் உயிர் கட்டுப்பாடு மேலாண்மை குறித்த செயல்விளக்கங்களும் நடத்தப்பட்டது.

## தேசிய பூச்சி கண்காணிப்பு அமைப்பின் காணொளியை விவசாயிகளுக்கு காட்சிப்படுத்துதல்



ஆகஸ்ட் 11, 2024 அன்று, வேளாண் அறிவியல் மையத்தில் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தால் உருவாக்கப்பட்ட உயிரி–வளர்ச்சியால் செறிவூட்டப்பட்ட 109 காலநிலை எதிரப்பு பயிர் வகைகளின் வெளியீடு குறித்த மாண்புமிகு பிரதமரின் நிகழ்ச்சியை காணொளி காட்சி மூலம் விவசாயிகளுக்கு காட்சிப்படுத்தப்பட்டது. **NPPS** (தேசிய பூச்சி மற்றும் நோய் கண்காணிப்பு) செயலியின் பதிவிறக்கம் மற்றும் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு ஒரு நடைமுறை செயல்விளக்கங்களும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் பூச்சி அடையாளம் காணல் மற்றும் நோய் கண்டறிதலுக்கான பயன்பாட்டை எவ்வாறு பயன்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மொத்தம் 62 விவசாயிகள் பங்கேற்றனர்.

## மண் பரிசோதனை முகாம்



ஆகஸ்ட் 12, 2024 அன்று வாசுதேவநல்லூர் தொகுதியின் சங்கனாபேரியில் வேளாண் அறிவியல் மையம் சார்பில் மண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாம்கள் மூலம் மண் பரிசோதனையின் முக்கியத்துவம் மற்றும் விவசாயிகள் தங்கள் நிலத்தின் மண்வளத்தை அறிந்துகொண்டு அதற்கேற்றவாறு சாகுபடி செய்ய வழிவகுக்கிறது. மேலும் மண் மாதிரிகளை சேகரிப்பதற்கான கள அளவிலான நுட்பங்களை செயல்விளக்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு காட்சிப்படுத்தப்பட்டது. விவசாயிகளின் வயலில் இருந்து மொத்தம் 46 மண் மாதிரிகளும் சேகரிக்கப்பட்டன.

## பண்ணை மகளிருக்கான இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி



தென்காசி மாவட்டம், தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதாரத் திட்டம் மற்றும் வேளாண் அறிவியல் மையம் இணைந்து 2024 ஆண்டு ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பல்வேறு தேதிகளில் பண்ணை மகளிருக்கான இயற்கை வேளாண்மை குறித்த ஐந்து நாள் திறன் மேம்பாட்டு பயிற்சி பல்வேறு வட்டாரங்களில் நடத்தப்பட்டது. இதில் வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானிகள் கலந்துகொண்டு பண்ணை மகளிருக்கு இயற்கை வேளாண்மை மற்றும் இடுபொருள்களை ஜீவநிர்த்தம், கனஜீவாமிர்த், பீஜாமிர்தம், அக்னியாஸ்திரம், நீமாஸ்திரம், பிரம்மஸ்திரம் தயாரிப்பது குறித்தும் இயற்கை விவசாயத்தின் கீழ் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை நுட்பங்கள் மற்றும் பல்வேறு உயிரி இடுபொருள்கள் உற்பத்தி முறைகள் குறித்தும் எடுத்துரைத்தனர். அதைத்தொடர்ந்து ஒருங்கிணைந்த பண்ணை முறை மாதிரிகள், பண்ணை விளைப்பொருள்களின் சந்தைப்படுத்தல் மற்றும் பிராண்டிங் பற்றிய விரிவான விளக்கங்களையும் வழங்கினர். தென்காசி மாவட்டத்தில் இந்தத் திட்டத்தின்கீழ் மொத்தம் 123 பண்ணை மகளிருக்கு பயிற்றுவிக்கப்பட்டது.

## ஏக் பெட் மா கே நாம் – மரம் நடும் முகாம்

"ஏக் பெட் மா கே நாம்" – மரம் நடும் இயக்கம் – (தாயின் பெயரிலொரு மரம்) உலக சுகாதார தினத்தை முன்னிட்டு மாண்புமிகு பிரதமர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இதனை முன்னிட்டு தென்காசி மாவட்டம் வேளாண் அறிவியல் மையத்தில் 21.08.2024 மற்றும் 29.08.24 ஆகிய தேதிகளில் விவசாயிகளுடன் இணைந்து இந்நிகழ்ச்சியானது நடத்தப்பட்டது. இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் 100 மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் விவசாயிகள், மாணவர்கள் மற்றும் வேளாண் அறிவியல் மைய அலுவலர்கள் என மொத்தம் 95 நபர்கள் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டனர்.



## பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி திட்டம்



வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் ஜூன் 18, 2024 அன்று மாண்புமிகு பிரதமரின் கிசான் சம்மன் நிதி திட்டத்தின்கீழ் 17–வது தவணைத்தொகை வெளியீட்டு நேரலை விவசாயிகளுக்கு காணொளி மூலம் காட்சிப்படுத்தப்பட்டது. விவசாயம் மற்றும் அதன் தொடர்புடைய துறைகளின் பல்வேறு அரசு திட்டங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. சாகுபடி முறைகள் குறித்த விவசாயிகளின் கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்டது. கலந்துரையாடல்கள் மற்றும் தகவல் பரிமாற்றங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன. அதைத் தொடர்ந்து இயற்கை விவசாயம் மற்றும் காய்கறி உற்பத்தி தொழில்நுட்பம் குறித்த பயிற்சியும் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியின் பங்கேற்பாளர்களுக்கு துண்டு பிரசுரங்கள் மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் மொத்தம் 92 விவசாயிகள் மற்றும் விவசாயப் பெண்கள் பங்கேற்றனர்.


# ICAR RVS வேளாண் அறிவியல் மையம்

**ஊர்மேலழகியான் கிராமம், ஆய்க்குடி அஞ்சல்,**

**கடையநல்லூர் வட்டாரம், தென்காசி மாவட்டம் - 627852**

அலைபேசி எண் : **94439 62433** மின்னஞ்சல் : **tirunelvelikvk@gmail.com** இணையதளம் : **www.rvskvk.org**